04.02.2025

OS No: 120/2017

வா.சா.1 திரு.நாச்சியப்பன் , த/பெ. சண்முகம்

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால் மேலூரில் வசித்து வருகிறேன், திருப்பத்தூரில் கடை வைத்துள்ளேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் கெமிக்கல் வியாபாரம் செய்கிறேன். பிரதிவாதியை எனக்கு வா.சா.ஆ.1 அக்ரிமெண்ட் ஏற்பட்ட காலத்தில் தான் தெரியும் என்றால் மேற்படி அக்ரிமெண்ட் காலத்திற்கு முன்பு ஒரு வருடமாக தெரியும். நான் கெமிக்கல் வியாபாரம் செய்வதை தவிர வட்டிக்குப் பணம் கொடுத்து வாங்கும் தொழில் செய்கிறேன் என்றால் ஆரம்பத்தில் செய்தேன், தற்போது இல்லை. நான் வட்டித் தொழில் செய்த காலத்தில் தான் பிரதிவாதி எனக்கு பழக்கம் என்றால் சரிதான். சொத்தின் பாத்தியதாரரிடம் தான் சொத்து பொதுவாக கிரையம் வாங்கப்படும் என்ற விபரம் எனக்குத் தெரியும் என்றால் தெரியும். பொதுவாக சொத்தை நல்ல எண்ணத்தில் வாங்கும்போது சொத்திற்கான வில்லங்கம் பார்த்து வாங்கப்படும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் கண்ட சொத்தை கிரையம் முடிப்பதற்கான கிரைய காலம் ஒரு வருடம் என சொல்லியிருப்பது நான் சொல்லி ஏற்படுத்தப்பட்டதா என்றால் இல்லை, பிரதிவாதி சொல்லி ஏற்படுத்தப்பட்டது பிரதிவாதியின் மகன் அமெரிக்காவில் உள்ளார் என்றும் அவர் வந்து கையெழுத்து செய்யவேண்டும் என்பதால் மேற்படி கால அவகாசம் ஏற்படுத்தப்பட்டது. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.4 அறிவிப்பு நான் சொல்லி தான் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.4ல் நான் மேலே குறிப்பிட்ட ஒரு வருட காலத்திற்கான காரண சங்கதி சொல்லப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வேறு என்ன ஆவணம் பிரதிவாதி பெயரில் இருந்தது என்றால் வேறு ஆவணங்கள் பார்க்கவில்லை. தாவா சொத்து பிரதிவாதிக்கு பாத்தியம் என்பதற்கான ஆவணம் எதுவும் தாவா வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு நான் சொல்வது போன்று பிரதிவாதி பெயரிலான

ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தைப் பொறுத்து பிரதிவாதி மகன் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது போன்ற அறிவிப்பு எதுவும் எனக்கு வரவில்லை. தாவா சொத்து பிரதிவாதியின் தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். தாவா சொத்தைப் பொறுத்து பிரதிவாதியின் தாயார் பிரதிவாதியின் பெயரில் ஆவணம் ஏதேனும் எழுதி வைத்துள்ளதை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு எத்தனைபேர் வாரிசு என்றால் 2 பேர் வாரிசு. பிரதிவாதி எனக்கு தாவா வழக்கில் குறிப்பிட்ட கிரைய ஒப்பந்தம் எதுவும் எழுதி தரவில்லை என்று சொல்கிறார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

R PANDY
Digitally signed by R PANDY
Date: 2025.02.04 17:30:25 +0530